தஞ்சை வேளாண் கல்லூரிக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு குடும்பத்தினர் நன்றி!

## மகத்தான அஞ்சலி என புதல்வி சவும்யா சுவாமிநாதன் பாராட்டு!

சென்னை, அக்.19 -

தஞ்சை வேளாண் கல்லூரிக்கு வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் பெயர் வைத்ததற்கும், அவர் பெயரில் வேளாண் மாணவர்களுக்கு விருதுகள் அறிவித்ததற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் குடும்பத்தார் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவரது புதல்வி சவும்யா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். தமது தந்தைக்கு தமிழ்நாடு அரசு மகத்தான அஞ்சலி செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இது குறித்து வேளாண் விஞ்ஞானி மறைந்த எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் மகள் டாக்டர் வி.சவும்யா சுவாமிநாதன் காணொலியில் தெரிவித்துள்ளதாவது:

தஞ்சாவூர் ஈச்சங்கோட்டையில் உள்ள அரசினர் வேளாண் கல்லூரிக்கு எங்கள் தந்தை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயர் சூட்டப்படும் என்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் மரியாதைக்குரிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு தீர்மானம் நிறைவேற்றி அறிவித்திருப்பதை அறிந்து எங்களது குடும்பத்தினர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

அது மட்டுமன்றி வேளாண் கல்லூரியில் தகுதி வாய்ந்த மாணவ ர்களுக்கு அவர் பெயரில் விருது வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சட்டப் பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பதும் எங்கள் குடும்பத்தினருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தம் வாழ்நாள் முழுமைக்கும் வேளாண்துறையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட எங்களது தந்தையாருக்கு தமிழ்நாடு அரசு அளித்துள்ள மகத்தான அஞ்சலி இது என்றே நான் கருதுகிறேன்.

இந்த நாட்டின் உணவு சத்துணவு, பாதுகாப்பு உள்ளிட்ட வேளாண் சம்பந்தப்பட்ட துறைகளில் அளப்பரிய பணிகள் ஆற்றியதுடன், அறிவியல் கல்வியில் அதிக நாட்டம் கொண்டு அதை முறைப்படி இளைய தலைமுறைக்கு வழங்குவதில் ஆர்வம் கொண்டவராக இருந்தார்.

இந்தியாவில் உள்ளவர்கள் அறிவியல் துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்று வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தவர், தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடைமுறைகளை அரிய வாய்ப்பு பெற்றவராக இருப்பின் உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்.

மிக உயரிய கொள்கைகளுடன் வாழ்ந்தவர்கள் பற்றிய வரலாறுகளை இளந்தலைமுறையினர் படித்துத் தெரிந்துகொள்ள அரசு மேற்கொண்டு வரும் செயல்கள் வெகுவாகப் பாராட்டுக்குரியதாகும்.

பல்வேறு சாதனைகளை புரிந்தவராக இருப்பினும், மறைந்த எங்கள் தந்தையார் மிகவும் அடக்கமானவர். சமுதாயத்தில் அதிர்ஷ்டமற்றவர்கள் எனப்படும் அடித்தட்டு மக்களிடம் இரக்கம் கொண்டவர் என்பதோடு அவர்கள் மீது எப்போதும் அனுதாபத்துடன் இருந்தவர்.

அவரது வாழ்க்கையில் அவர் செயல்படுத்திய சாதனைகள் மூலம் நாங்கள் பெருமை அடைகிறோம். எங்கள் குடும்பம் சார்பில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயர் தஞ்சை ஈச்சங்கோட்டையில் உள்ள வேளாண் கல்லூரிக்கு சூட்டப்பட்டுள்ளது மாணவர்களுக்கு பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக நாங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இது எங்களது தந்தை டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் தலைசிறந்த அஞ்சலி யாகும்.

இவ்வாறு டாக்டர் சவும்யா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

மறைமலைநகரில் நடைபெறும் மாவட்ட ஆய்வுக் கூட்டத்திற்குச் சென்ற

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழியெங்கும் உற்சாக வரவேற்பு!

## ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் கழகத்தினர் குவிந்தனர்!

மறைமலைநகர், அக்.19 -

மறைமலைநகரில் நடைபெறும் 4 மாவட்ட ஆய்வுக் கூட்டத்திற்குச் சென்ற தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழியெங்கும் சாலை இருபுறமும் பொது மக்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் குவிந்து நின்று கழக கொடிபதாகைகளை ஏந்தி எழுச்சியுடன் வரவேற்றனர்.

காஞ்சிபுரம் - செங்கல்பட்டு - திருவள்ளூர் - சென்னை ஆகிய 4 மாவட்ட வளர்ச்சிப் பணிகள் தொடர்பான 2 நாள் ஆய்வுக் கூட்டம் மறைமலைநகரில் உள்ள ஊரக வளர்ச்சி பயிற்சி கழக அரங்கில் நேற்று முன்தினம் தொடங்கியது, இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் காலை சென்னையில் இருந்து புறப்பட்டார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட எல்லையான ஆலந்தூர் கத்திப்பாரா ஆசர்கானா சந்திப்பு அருகில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர்அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் கழகத்தினர் ஆயிரக்கணக்கில் திரண்டு நீண்ட வரிசையில் நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர்.

செண்டை மேளதாளம் பாண்டு வாத்தியம் அதிர் வேட்டுகள் முழங்க எழுச்சியான முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், ஆலந்தூர் பகுதி செயலாளர் என்.சந்திரன், பி.குணாளன், காஞ்சி மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர்கள் என்.கோபால், எஸ்.டி.கருணாநிதி, ஏ.வந்தே மாதரம், ஜி.கே.ரவி, நகரச் செயலாளர்கள் கோ.சத்திய மூர்த்தி, பேரூர் செயலாளர் ஆர்.சதீஷ்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் பாரதி, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன், எஸ்.சதீஷ், மா.கணேஷ் பாபு, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் உமாமகேஷ்வரி வந்தேமாதரம் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் முதல்வருக்கு பொன்னாடை அணிவித்து மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ, தலைமையில் கழகத்தினர் நீண்ட வரிசையில் நின்று மிகவும் எழுச்சியுடன் வரவேற்பு அளித்தனர்.

தாம்பரம் மாநகர மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், பகுதி செயலாளர்கள் வே.கருணாநிதி, த.ஜெயக்குமார், ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னார்ட், எஸ்.சேகர், ஆ.நடராஜன், இரா. சுரேஷ், தாம்பரம் மாநகர துணை செயலாளர் இரா. நரேஷ்கண்ணா, பெருளாளர் செம்பாக்கம் கண்ணன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மு.ரஞ்சன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் முதல்வருக்கு பொன்னாடை அணிவித்து மகிழ்ச்சியாக வரவேற்பு தந்தனர்.

தாம்பரம் பேருந்து நிலையம் அருகில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ். ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., தலைமையில் கழகத்தினர் ஆர்வத்துடன் கூடி நின்று உற்சாக வரவேற்பு தந்தனர். பகுதி செயலாளர்கள் டி. காமராஜ், எஸ்.இந்திரன், மாநகர மகளிரணி செயலாளர் ரமணி ஆதிமூலம் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் முதல்வருக்கு பொன்னாடை அணிவித்து எழுச்சியாக வரவேற்றனர்.

அடுத்து கூடுவாஞ்சேரி பேருந்து நிலையத்தில் மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., தலைமையில் கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு நின்று மகிழ்ச்சியுடன் வரவேற்பு அளித்தனர். மாவட்ட துணை செயலாளர் து. மூர்த்தி, மாவட்டப் பொருளாளர் வெ.விசுவ நாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வீ.தமிழ்மணி, கூடுவாஞ் சேரி நகரச் செயலாளர் எம்.கே.டி. கார்த்தி, மாவட்ட ஊராட்சி தலைவர் செம்பருத்தி துர்கேஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். எல்.செந்தில் இதயவர்மன், ஆர்.டி.அரசு, ஒன்றியச் செயலாளர்கள் பையனூர் சேகர், வி.எஸ்.ஆராமுதன், பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், எஸ். நரேந்திரன், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி. யுவராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.சி. அன்புச்செழியன், க.அன்புசெல்வன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அருள் தேவி, எம்.செல்வகுமார், ஜிஜேந்தி ரன் ராமு, காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் உதயா கருணாகரன், செங்கல்பட்டு நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் காயத்திரி அன்புச்செழியன், திருப்போரூர் ஒன்றியக்குழு துணைத் தலைவர் சத்யா சேகர், மறைமலைநகர் நகர மன்ற துணை தலைவர் சித்ரா கமலக்கண்ணன் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகி கள் பொன்னாடை அணிவித்து உற்சாகமாக வரவேற்றனர். ஆலந்தூர் கத்திப்பாரா சந்திப்பு முதல் மறைமலைநகர் வரை வழி நெடுகிலும் சாலையின் இருபுறமும் பொது மக்கள் மிகவும் ஆர்வத்துடன் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் கூட்டமாக கூடி நின்று மகிழ்ச்சியுடன் கையசைத்து வணக்கம் தெரிவித்து உற்சாகமாக வரவேற்றது பார்க்க கண்கொள்ளா காட்சியாக இருந்தது.




விழுப்புரம் வடக்கு மாவட்டம்ஆரணி நாடாளுமன்ற தொகுதி 71 மைலம் சட்டமன்ற தொகுதி வாக்குசாவடிபாக முகவர்கள் கலந்து கொண்டஆலோசனை கூட்டம்தொகுதி பொறுப்பாளர் ஜெரால்டு தலைமையில் ரெட்டணையில் நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், செந்தமிழ்ச்செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத்தலைவர்டாக்டர் சேகர்,ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

விருதுநகர் மாவட்டத்தில் – தனியார் பட்டாசு ஆலைகளில் தீ விபத்து!

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.19 -

விருதுநகர் மாவட்டத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலைகளில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள், நேற்று முன்தினம் இதுகுறித்து வெளியிட்ட அறிவிப்பு வருமாறு :

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், மாரனேரி கிராமம், கிச்சநாயக்கன்பட்டி மற்றும் சிவகாசி வட்டம், மங்களம் கிராமம் ஆகிய இரு வேறு இடங்களில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலைகளில் 17-10-2023 அன்று எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீவிபத்தில் 11 பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் படுகாயமடைந்து ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தின ருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## திருநின்றவூரில் காலை உணவுத் திட்டம்! சா.மு.நாசர் ஆய்வு!

திருவள்ளூர் அக் 19 -

தமிழ்நாடு அரசின் காலை உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தி அனைத்து தொடக்க பள்ளிகளிலும் செயல் படுத்தப்பட்டுள்ளது.. இந்த நிலையில் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி அடுத்த திருநின்றவூர் கோமதிபுரம் அரசு தொடக்கப்பள்ளியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. காலை உணவுத் திட்டத்தை தரம் மற்றும் தயாரிக்கும் முறைகள் குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்த அவர், காலை உணவுத் திட்ட ஆய்வு குறித்து படிவம் பூர்த்தி செய்தார்.

இதனை தொடர்ந்து புதியதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறையை ஆய்வு மேற்கொண்டார் அதோடு கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டி தர ஆசிரியர்கள் கோரிக்கையை சட்ட மன்ற நிதியில் கட்டித்தருவதாக உறுதியளித்துள்ளார் .

தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

## மாவட்ட ஒருங்கிணைப்பாளர் துணை ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்!

தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, எம்.எல்.ஏ., அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணியின் சென்னை மேற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் துணை ஒருங்கிணைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சென்னை மேற்கு மாவட்டம்**

சென்னை மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட ஆர்.கோபால் ராம் அவர்களை, அவர் வகித்து வந்து பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக,

**ஜி.வி.சரவணன்** அவர்கள் சென்னை மேற்கு மாவட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராகவும்;

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (ஆயிரம் விளக்கு) களப்பணிக்காக நியமிக்கப்பட்ட ஜி.வி.சரவணன் அவர்களுக்குப் பதிலாக **ஆதவன்வர்ஷன்** அவர்கள் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (ஆயிரம் விளக்கு) (களப்பணி)வும்;

மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி) (களப்பணி) நியமிக்கப்பட்ட ஆர்.தேசிங்கு அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **சாகுல் அமீது** அவர்கள் மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி) (களப்பணி)வும்;

மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட செ.லோகராஜ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **மு.வினோத்** அவர்கள் மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) வும் நியமிக்கப்படுகிறார்கள்.

மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர் (அண்ணா நகர்)ராக பணியாற்றி வரும் **ஜெயகுமாரன்** அவர்கள் தொடர்ந்து மாவட்ட துணை ஒருங்கிணப்பாளராக (அண்ணாநகர்)வும், அதைப்போல, மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) – பணியாற்றி வரும் டாக்டர். **எஸ்.ஐ.பி.ஷேக் ஆரிபா** அவர்கள் தொடர்ந்து மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர்)வும் தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”“**
சென்னை 18.
நாள் : 17- 10- 2023.

அமைச்சர் **முனைவர் டி.ஆர்.பி.ராஜா,**
செயலாளர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

மயிலம் தொகுதியில்

# வாக்குச்சாவடி பாக முகவர்கள் கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

மைலம் அக் 19-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஆரணி நாடாளுமன்ற தொகுதி 71 மைலம் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள் BLA2 ஆலோசனைக் கூட்டம் ரெட்டணையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது .

மாணவரணி மாநில இணை செயலாளரும், தலைமைக் கழக மைலம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் ஜெரால்டு தலைமை தாங்கினார்.

மாவட்டத் துணைச் செயலாளரும், மைலம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்அருணகிரி, மைலம் ஒன்றிய பெருந்தலைவர்யோகேஸ்வரி மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றதிலிருந்து இரண்டரை ஆண்டு காலத்தில் செய்த சாதனைகளுக்காக மக்கள் வாக்களிக்க தயாராக உள்ளனர்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் உன்னதமான சிறப்பு திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தைதொடங்கி வைத்துள்ளார்கள்.

கடந்த 10 ஆண்டுகாலத்தில் கிடப்பில்இருந்த 2 லட்சம் விவசாயிகளுக்கு இரண்டரைஆண்டு காலத்தில் மின் இணைப்பு திட்டத்தை வழங்கி இந்தியாவில் சரித்திரம் படைத்திருக்கின்ற முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம்.

கிராமத்தில் உள்ள ஏழை எளிய பெண்கள் உயர்கல்வி பெறுவதற்கு புதுமைப்பெண் திட்டம் ,காலை உணவுத் திட்டம் இது போன்ற ஒட்டுமொத்தமான திட்டங்களை வழங்கி இந்தியாவில் சரித்திரம் படைத்த முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம்.

முதலமைச்சர் தலைமையில் இந்தியா கூட்டணி தமிழகம் புதுவை உட்பட 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் அமோக வெற்றி பெறும் .

திமுக கூட்டணியை எதிர்த்து நிற்கும் கூட்டணி வேட்பாளர்கள் டெபாசிட் இழப்பதற்கு அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டுமென அமைச்சர் செஞ்சி மஸ்தான் உறுதிபட தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன்,செந்தமிழ் செல்வன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா ,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட துணை செயலாளர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, மணிமாறன், ராஜாராமன், துரை, இளம்வழுதி, செழியன்,மாநில,மாவட்ட,ஒன்றிய, கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், உள்ளாட்சிபிரதிநிதிகள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் முதல்வர் மு. க .ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 22 .10. 23. அன்று திருவண்ணாமலையில் நடைபெறும் வாக்குச்சாவடி முகவர்கள் மண்டல மாநாட்டில்மயிலம் தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி முகவர்களும் பங்கேற்பது தொடர்பாகவும்,டிசம்பர் மாதம் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெறும் திமுக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில் மயிலம் தொகுதியில் இருந்து திரளாக பங்கேற்பது எனவும், இல்லம் தேடி சென்று இளைஞர் அணியில்புதியஉறுப்பினர்களை சேர்ப்பது தொடர்பாகவும், வாக்குச்சாவடி முகவர்கள் வாக்காளர் பட்டியலை சரி பார்ப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



முதலமைச்சர் – கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், சென்னிமலை வட்டாரம் சார்பில் வெள்ளோடு தேவி மஹாலில் சமுதாய வளைகாப்பு விழாவை தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகரப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நடத்தி வைத்து, சீர்வரிசைகள் வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்க்ரா, சென்னிமலை ஒன்றிய கழக செயலாளர் செங்கோட்டையன், மாநகராட்சி துணை மேயர் வி.செல்வராஜ், சென்னிமலை ஊராட்சி குழு தலைவர் காயத்ரி இளங்கோ உள்ளிட்ட கழக நிர்வாகிகள் துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.